# ராசிபுரத்தில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ கைலாசநாதர் ஆலய சித்திரை திருத்தேரோட்டம்



**ராசிபுரம்,ஏப்.24-**

நாமக்கல் மாவட்டம், ராசிபுரத்தில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ தர்ம சம்வர்த்தினி அம்பாள் சமேத கைலாசநாதர் கோவில் உள்ளது. கடையெழு வள்ளல்களில் ஒருவரான வல்வில் ஓரியால் கட்டப்பட்டு வழிபட்ட சிறப்புமிக்க ஸ்ரீ கைலாசநாதர் கோவிலின் திருத்தேரை ஏராளமான பக்தர்கள் வடம்பிடித்து இழுத்தனர். சிவனடியார்கள் கைலாய மேளம் வாசிக்க ஏராளமான பக்தர்கள் ஓம் நமச்சிவாய கோஷத்துடன் பக்தர்கள் வடம் பிடித்து இழுத்து சென்றனர். இக்கோவில் சித்திரை தேர் திருவிழா கடந்த ஏப்ரல் 14-ல் கொடியேற்றத்துடன் தொடங்கியது. பின்னர் கட்டளைதாரர்கள் சார்பில் சுவாமி ஊர்வலம் வந்தது. தொடர்ந்து நாள்தோறும் சுவாமிக்கு மஹா அபிஷேகம், சிறப்பு வழிபாடு, திருவீதி உலா, திருக்கல்யாணம் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதனை தொடர்ந்து உற்சவர் ஸ்ரீகைலாசநாதர் பக்தர்கள் ஓம் நமச்சிவாய கோஷத்துடன் தேரில் ஏற்றினர். தொடர்ந்து தேர் இழுக்கும் நிகழ்ச்சி (23.4.2024) செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்து அறநிலையத் துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்ச்சியில் ராசிபுரம் நகர மன்ற தலைவர் முனைவர் ஆர்.கவிதா சங்கர், நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே.பி. சின்ராஜ், ராசிபுரம் டிஎஸ்பி விஜயகுமார், காவல் ஆய்வாளர் கே.செல்வராசு, கோவில் செயல் அலுவலர் நந்தகுமார், பஸ் அதிபர் பரந்தாமன், பக்தர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு தேரை வடம் பிடித்து இழுத்தனர். பழைய பேருந்து நிலையத்திலிருந்து திருத்தேர் இழுக்கப்பட்டு கவரைத்தெரு வழியாக இழுத்து செல்லப்பட்டு, பெரிய கடைவீதியில் இடை நிறுத்தப்பட்டது. இதனை தொடர்ந்து 2வது நாள் புதன் கிழமை மீண்டும் தேர் இழுக்கப்பட்டு கச்சேரி வீதி வழியாக பழைய பேருந்து நிலையம் தேர் வந்து சேரும். தொடர்ந்து சிவனடியார் கூட்ட அறக்கட்டளை சார்பில் பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் மற்றும் நீர்மோர் வழங்கப்பட்டது.

# நாமக்கல் விவேகானந்தா மகளிர் தொழில்நுட்ப கல்லூரி வாக்கு எண்ணும் மையத்தில் கலெக்டர் ச.உமா ஆய்வு



**நாமக்கல்,ஏப்.24-**

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், எளையம்பாளையம் விவேகானந்தா மகளிர் தொழில்நுட்ப கல்லூரியில் (23.04.2024) மாவட்ட தேர்தல் அலுவலர் / கலெக்டர் மருத்துவர் ச.உமா, , நாமக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.ராஜேஸ் கண்ணன் இ.கா.ப., முன்னிலையில் மக்களவைப் பொதுத்தேர்தலில் வாக்குபதிவு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

நாமக்கல் மாவட்டத்தில் மக்களவைப் பொதுத்தேர்தல் 19.04.2024 அன்று அமைதியான முறையில் நடைபெற்றது. 6 சட்டமன்ற தொகுதிகளுக்கு திருச்செங்கோடு விவேகானந்தா மகளிர் தொழில்நுட்ப கல்லூரியில் வாக்கு எண்ணிக்கை மையம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், 92.இராசிபுரம், 93.சேந்தமங்கலம், 94.நாமக்கல், 95.பரமத்தி வேலூர், 96.திருச்செங்கோடு மற்றும் 87.சங்ககிரி ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகளில் வாக்குப்பதிவு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், கட்டுப்பாட்டு இயந்திரங்கள், வாக்காளர்கள் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் இயந்திரங்கள் (VVPAT) ஆகியவை 6 சட்டமன்ற தொகுதிகளின் வாக்கு எண்ணும் மையமான திருச்செங்கோடு விவேகானந்தா மகளிர் தொழில்நுட்ப கல்லூரிக்கு கொண்டு வரப்பட்டு, மூன்று அடுக்கு பாதுகாப்புடன் சட்டமன்றத் தொகுதி வாரியாக வைக்கப்பட்டு முத்திரையிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, (23.04.2024) மாவட்ட தேர்தல் அலுவலர் / கலெக்டர் மருத்துவர் ச.உமா, நடைபெற்ற மக்களவைப் பொதுத்தேர்தலில் வாக்கு பதிவு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள திருச்செங்கோடு விவேகானந்தா மகளிர் தொழில்நுட்ப கல்லூரியில் ஆய்வு மேற்கொண்டார். மேலும், திருச்செங்கோடு விவேகானந்தா மகளிர் தொழில்நுட்ப கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையின் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார். மேலும், வாக்கு எண்ணிக்கை மையத்தில் நடைபெறும் தடுப்பு அமைக்கும் பணிகளை விரைந்து முடிக்குமாறு பொதுப்பணித் துறையினருக்கு மாவட்ட கலெக்டர் மருத்துவர் ச.உமா, அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வில் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் ஆர்.பார்த்திபன் (நாமக்கல்), ச.பிரபாகரன் (சேந்தமங்கலம்), த.முத்துராமலிங்கம் (இராசிபுரம்), ச.பாலாகிருஷ்ணன் (பரமத்தி வேலூர்) மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கஞ்சனூர் கிராமத்தில் ஸ்ரீ காளியம்மன் திருக்கோயில் 61 ஆம் ஆண்டு தேர் திருவிழா



**கிருஷ்ணகிரி,ஏப்.24-**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டம் கஞ்சனூர் கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ காளியம்மன் சுவாமி திருக்கோயில் சித்திரை பௌர்ணமி முன்னிட்டு 61 ஆம் ஆண்டு தேர் திருவிழா 22.3.24 திங்கட்கிழமை காலை 6. 7:30 மணிக்குள் கொடியேற்றம் 23.தேதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஸ்ரீ அம்மனுக்கு அபிஷேக ஆராதனை பகல் இரண்டு மணிக்கு அம்மனுக்கு கூழ் ஊற்றுதல் பகல் நான்கு மணிக்கு எருது விடும் திருவிழா இரவு 7 மணிக்கு அம்மன் பெரிய தேர் ரதத்தில் சுவாமி உற்சவம் இரவு 8 மணிக்கு சீர்வரிசை ஊர்வலம் விண்ணை பிளக்கும் அதிரடி வான வேடிக்கை மேல தாளத்துடன் ஸ்ரீ காளியம்மன் சுவாமி தேர்த்திருவிழா உலா வரும் அன்று இரவு 10 மணிக்கு தெருக்கூத்து நாடகம் நடைபெறும் புதன்கிழமை காலை 8 மணி முதல் கஞ்சனூர் இளைஞர் நற்பணி மன்றம் சார்பில் மாபெரும் அன்னதானம் நடைபெறும் மாலை 3 மணிக்கு அக்னி கரகம் பூ மிதித்தல் பூ கரகம் எடுத்தல் பத்ரகாளி வேஷம் குறவன் குறத்தி பொய்க்கால் குதிரை ஆட்டம் வெகு விமர்சையாக நடைபெறும் வியாழன் பிற்பகல் 3 மணியளவில் அம்மனுக்கு மாவிளக்கு பொங்கல் வைத்தல் வெள்ளிக்கிழமை அம்மனுக்கு பச்சை போடுதல் மஞ்சள் நீராட்டுதல் மற்றும் கஞ்சனூர் இளைஞர் நற்பணி மன்றம் சார்பாக கபடி போட்டி உரி அடித்தல் போட்டி நடைபெறும் இவ்விழா

விற்கான ஏற்பாடுகளை ஊர் நாட்டாமை அறிவழகன், ஊர் தர்மகர்த்தா முனியப்பன் , கோல்காரர் காளியப்பன், கோவில் நிர்வாகி செல்வராஜ், வார்டு உறுப்பினர் முருகன், முனியம்மாள், பழனியம்மாள் ரவி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் மலர்கமலநாதன், மாது அப்பாசாமி, முன்னாள் நாட்டாமை சின்ராஜ், மற்றும் சக்திவேல், மாதப்பன், சுரேஷ், சிவாஜி மாதப்பன் சுந்தர்ராஜன், கோவில் பூசாரி பரமசிவம், உள்ளிட்டோர் கஞ்சனூர் இளைஞர் நற்பணி மன்றம் சார்பில் மிகவும் சிறப்பாக நடைபெறும்.

# ஜெயம் யோகா அறக்கட்டளை சார்பில் விழிப்புணர்வு நிகழ்வு



**தர்மபுரி,ஏப்.24-**

அதியமான் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சியில் பயிலும் நான்காம் ஆண்டு மாணவிகள் ஊரக வேளாண்மை பயிற்சியின் கீழ் 23/4/2024, காலை தர்மபுரி மாவட்டம் ,உங்கராணஹள்ளி பகுதியில் "ஜெயம் யோகா அறக்கட்டளை அமைப்புகளுடன் இணைந்து மீண்டும் மஞ்சப்பை விழிப்புணர்வு & மண் பானை பயங்களின் விழிப்புணர்வு நிகழ்வை ஊர் பொது மக்களிடையே நடத்தினர். நெகிழி பொருட்களின் தீங்குகளை பற்றியும் அதற்கு மாற்றாக மஞ்சபைகளின் உபயோகத்தில் விளையும் நன்மைகளை பற்றியும் விளக்கினர். மேலும் குளிர்சாதன பெட்டிகள் மூலம் நிகழும் காற்று மாசுபாட்டை கருத்தில் கொண்டும் மண் பானைகளின் தற்கால தேவைகளை பற்றியும் எடுத்துரைத்தனர். பொது மக்களை ஈர்க்க சத்தான உணவுகளை *ஜெயம் யோகா அறக்கட்டளை * வழங்கினர்.

இந்நிகழ்வில் சிகரலஅள்ளி இயற்கை மற்றும் கல்வி அறக்கட்டளை, பீனிக்ஸ் குழு, நீரின்றி அமையாது உலகு அறக்கட்டளை ஆகிய தன்னார்வ அமைப்புகள் இணைந்து களப்பணியில் ஈடுபட்டனர். இவ்விழாவிற்க்கான ஏற்பாடுகளையோகா ஆசிரியை மற்றும் சமூக ஆர்வளர் ஜெயபிரியா,ஜெயம் யோகா அறக்கட்டளை குடும்பத்தின் சமூக ஆர்வளர்கள் சத்யா சிவக்குமார், ஞானவேல். சிவா சிறப்பாகவிழிப்புணர்வு நிகழ்வை நடத்தினார்கள்.ஜெயம் யோகா அறக்கட்டளையின் நோக்கம் "நோயற்ற பாரதத்தை உருவாக்குவதே" ஆகும்.

# தருமபுரி மாவட்டம்

# ஸ்ரீ விஜய் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 12-ம் வகுப்பு பயின்ற 300 மாணாக்கர்களுக்கு என் கல்லூரி கனவு உயர்கல்வி வழிகாட்டல் நிகழ்ச்சி

## கலெக்டர் கி.சாந்தி துவக்கி வைத்தார்




**தருமபுரி,ஏப்.24-**

தருமபுரி மாவட்டம், ஸ்ரீ விஜய் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 12-ஆம் வகுப்பு பயின்ற 300 மாணாக்கர்களுக்கு என் கல்லூரிக் கனவு உயர்கல்வி வழிகாட்டல் நிகழ்ச்சியை கலெக்டர் கி.சாந்தி, (23.04.2024) துவக்கி வைத்தார்.

கலெக்டர் கி.சாந்தி, தெரிவித்ததாவது:-பள்ளி மாணாக்கர்கள் தாழ்வு மணப்பாணைமை இல்லாமல் பயில வேண்டும், 11ம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்பு பள்ளி மாணவ, மாணவியர்கள் படிப்பில் தேர்ச்சி பெறவில்லை என்றாலும் மீண்டும் தன்னம்பிக்கையுடன் படித்து தேர்வில் வெற்றி பெற்று உயர் கல்வி பயில வேண்டும். மேலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவியர்களுக்கு உதவிதொகைகள், வேலைவாய்ப்பில் முன்னுரிமை, போட்டித் தேர்வில் முன்னுரிமைகள் போன்ற பல்வேறு அரசு சலுகைகள் வழங்கப்பட்டுவருகிறது. இவ்வாய்ப்பினை மாணவ, மாணவியர்கள் பயன்படுத்தி வாழ்வில் உயர்ந்திட வேண்டுமென அறிவுறுத்தினார்.

தருமபுரி மாவட்டத்தில் உள்ள SC/ST மாணாக்கர்களுக்கு உயர்கல்வி தொடர்பாக மருத்துவம், UPSC, IIT, விவசாயம் மற்றும் பல துறைகள் பற்றியும், மேலும் உயர் கல்வி படிப்பதற்கு கல்வி உதவித் தொகை திட்டம் பற்றியும் மாணாக்கர்களுக்கு ஏற்பட்ட ஐயம் தொடர்பான கேள்விகளுக்கு மாணவர்கள் புரிந்துகொள்ளும் அளவிற்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், 12-ஆம் வகுப்பிற்கு பிறகு உயர்கல்வி பெறுவதற்கு விண்ணப்பிக்கும் முறை மற்றும் பல்வேறு துறைகளில் உள்ள பட்ட/பட்டய பாடப்பிரிவுகள் குறித்து விரிவான விளக்கத்தினை மாணவர்களுக்கு உத்வேக பேச்சாளர், உயர்கல்வி வழிகாட்டுபவர் விரிவாக எடுத்துரைக்க உள்ளார்கள், உயர் கல்வி வழிகாட்டல் நிகழ்ச்சியில் கூறும் ஆலோசனையை கேட்டு உயர்கல்வி பயின்று அரசு உயர் பதவிகளுக்கு வர வேண்டும் என கலெக்டர் கி.சாந்தி, தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஜோதிசந்திரா, ஆதிதிராவிடர் நல அலுவலர் சாகுல் அமீத், பழங்குடியினர் நல அலுவலர் பி.எஸ்.கண்ணன், தனி வட்டாட்சியர் (ஆதிந) வள்ளி, உத்வேக பேச்சாளர் ஸ்டாலின் ராஜா, உயர் கல்வி வழிகாட்டுபவர் இளையராஜா, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குமரேசன், ஸ்ரீ விஜய் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி நிர்வாக இயக்குநர் பிரேம் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

# பாப்பாரப்பட்டியில் 3 கிலோ கஞ்சா பறிமுதல் காவல்துறையினர் நடவடிக்கை

**தர்மபுரி,ஏப்.24-**

தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் அடுத்த பாப்பாரப்பட்டி பகுதியில் பாப்பாரப்பட்டி காவல் நிலைய காவல் ஆய்வாளர் குமரவேல் உத்தரவின் பேரில் பாரப்பட்டி மின்வாரிய அலுவலகம் அருகே காவல் உதவி ஆய்வாளர் மாரி மற்றும் உதவி காவல் ஆய்வாளர் ராஜாராம் ஆகியோர் வாகன தணிக்கை மேற்கொண்டு வந்தனர்.

அப்போது அவ்வழியாக வந்த இருசக்கர வாகனத்தை நிறுத்தி வாகனத்தில் இருந்த இரண்டு இளைஞர்களை விசாரித்ததில் அந்த இளைஞர்கள் முன்னுக்கு பின் முரணான பதில் அளித்தனர் அதில் சந்தேகம் அடைந்த காவல்துறையினர் இருசக்கர வகணத்தையும் வைத்திருந்த பையை சோதனை செய்ததில் இதில் பதுக்கி வைத்து கடத்தி செல்ல இருந்த மூன்று கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்து பின்னர் இரண்டு இளைஞர்களையும் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தையும் காவல்துறையினர் கைப்பற்றி பாப்பாரப்பட்டி காவல் நிலையம் அழைத்து வந்து விசாரணை செய்ததில் பனைகுளத்தைச் சேர்ந்த செல்வம் மகன் கார்த்திகேயன் வயது 18 மற்றொருவன் வெள்ளாள முத்தூரைச் சேர்ந்த முருகேசன் மகன் தமிழரசன் வயது 23 என்பதும் தெரிய வந்தது மேலும் விசாரித்தபோது இவர்கள் இருவரும் இருசக்கர வாகனத்தில் கோயம்புத்தூரில் இருந்து ஓசூருக்கு விடப்பனைக்காக கஞ்சா கடத்தி சென்றது தெரிய வந்தது. பின்னர் காவல்துறையினர் அவர்களிடமிருந்த 3 கிலோ கஞ்சாவையும் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தையும் பறிமுதல் செய்து இருவரையும் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# பறவை காய்ச்சல் தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை: கோழிப்பண்ணைகளில் கலெக்டர் உமா திடீர் ஆய்வு



**நாமக்கல்,ஏப்.24-**

நாமக்கல் ஊராட்சி ஒன்றியம், தளிகை ஊராட்சியில் உள்ள தனியார் கோழிப்பண்ணையில் (23.04.2024) கலெக்டர் மருத்துவர் ச.உமா, பறவை காய்ச்சல் தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். அண்டை மாநிலமான கேரளா மாநில ஆலப்புழா உள்ளிட்ட பகுதிகளில் பறவைக் காய்ச்சல் நோய் அறிகுறிகள் கண்டறியப்பட்டுள்ளது. நாமக்கல் மாவட்டத்தில் 1,175 கோழிப் பண்ணைகளும், 6.35 கோடி பறவைகளும் உள்ளன. இது வரை நாமக்கல் மாவட்டத்தில் பறவைக் காய்ச்சல் அறிகுறிகள் எதுவும் கண்டறியப்படவில்லை. எனினும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கும் பொருட்டு கோழிப் பண்ணையின் நுழைவு வாயிலில் Footpath அமைத்து அதில் குளோரின்டை ஆக்சைடு கிருமி நாசினி கலவை கலந்து வைக்க வேண்டும். மேலும், உரிய உயிரியல் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். கோழிப்பண்ணைக்குள் நுழையும் மற்றும் வெளிசெல்லும் அனைத்து வாகனங்களையும் கிருமி நாசினி கொண்டு கோழிப் பண்ணையாளர்கள் சுத்தம் செய்திட வேண்டும். அனைத்து கோழிப்பண்ணைகளிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் உயிரியல் பாதுகாப்பு நடவடிக்கைகளை முறையாக கடைபிடிக்கவும், வழக்கத்திற்கு மாறாக பண்ணைகளில் அசாதாரண இறப்பு ஏற்படின் உடனடியாக கால்நடை பராமரிப்புத்துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என கோழிப்பண்ணை உரிமையாளருக்கு கலெக்டர் மருத்துவர் ச.உமா, அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் ம.செல்வராஜு, கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் மரு.சி.நாராயணன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road, Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# வெப்பம் அதிகரித்து காணப்படுவதால் பொதுமக்கள் நண்பகல் 12 மணி முதல் மதியம் 3 மணி வரை வெளியில் வருவதைத் தவிர்க்க வேண்டும்

## கலெக்டர் இரா.பிருந்தாதேவி தகவல்

**சேலம்,ஏப்.24-**

வெப்பம் அதிகரித்து காணப்படுவதால் அத்தியாவசிய தேவையின்றி பொதுமக்கள் நண்பகல் 12 மணி முதல் மதியம் 3 மணி வரை வெளியில் வருவதைத் தவிர்த்தல் வேண்டும். இதுகுறித்து கலெக்டர் டாக்டர். இரா.பிருந்தாதேவி, தெரிவித்துள்ளதாவது: தமிழ்நாட்டில் கடந்த சில நாட்களாக பல்வேறு மாவட்டங்களில் வெப்பம் அதிகரித்து காணப்படும் நிலையில், இந்திய வானிலை ஆய்வு மையம் தனது 23.4.2024 நாளிட்ட அறிவிக்கையில், தமிழ்நாட்டின் வட உள் மாவட்டங்களான வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், நீலகிரி, திருப்பூர், கோயம்புத்தூர், ஈரோடு, கரூர், திருச்சிராப்பள்ளி, அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களில் 23.4.2024 மற்றும் 24.4.2024 ஆகிய நாட்களில் ஓரிரு இடங்களில் வெப்ப அலைவீசக் கூடும்.

எனவே, பொதுமக்கள் போதுமான அளவு தண்ணீர் அருந்துமாறும் ,அத்தியாவசிய தேவையின்றி வெளியில் செல்வதை தவிர்க்குமாறும், குறிப்பாக நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை வெளியில் செல்வதை தவிர்த்திடுமாறும், வெயிலின் தாக்கத்தால் உடல்நலக் குறைவு ஏற்படும் நிலையில், உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும். இவ்வாறு கலெக்டர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தெரிவித்துள்ளார்.

தின பூமி
நாளிதழ்
படியுங்கள்

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within Three months thereafter, I, **FAIZUNISHA .M, D/o. Malick Basha, DOB: 20.03.2000,** Permanently residing at **D.No. 4/328-28, Thirumalai Nagar, Kattiganapalli Post, Krishnagiri Indl. Estate, Krishnagiri - 635 002. Tamil Nadu,** Intend having my enrolment as an Advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings High Court Campus, Chennai-104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

**FAIZUNISHA. M**

**IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT JUDGE, SALEM**

**Probate O.P. 52/2024**
**(In the matter of deceased Gunavathi)**

Arumugam, S/o. Subramaniam,
70/5D, 1st Cross, Balaji Nagar,
Ammapet, Salem.
...... Petitioner
Vs
NIL ..... Respondent

**அறிவிப்பு**

மேற்படி மனுவில் மனுதாரர் தனது சகோதரி 10.06.2017 தேதியில் குணவதி தன் பெயரில் எழுதி வைத்துள்ள உயில் சாசனத்தை PROBATE வேண்டி தாக்கல் செய்துள்ளார். அது Pr.O.P.No. 52/2024 என்று எண்ணிட்டு வருகின்ற **10.06.2024-**ம் தேதி இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் வாங்தா போடப்பட்டுள்ளது. மேற்படி மனு மீது எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் மேற்படி நீதிமன்றத்தில் **10.06.2024** தேதியில் காலை 10.00 மணிக்கு சமூகம் கோர்ட்டில் ஆஜராகி ஆட்சேபனை தெரிவிக்க வேண்டியது.

//கோர்ட்டார் உத்தரவுபடி//

**S.S. VIJAYARAGHAVAN,** B.A., B.L.,
Advocate, Salem.

**மாண்பமை உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், எடப்பாடி.**
**I.A. No. 3/2024 in Un O.S. No. /2024**

1) குஞ்சுப்பையன்
2) பிரகாசம்
3) கண்ணன்
4) சின்னப்பையன்
5) பழனிசாமி

....... மனுதாரர்கள் / வாதிகள்
- இடையே -

1. N. கோவிந்தராஜன்
2. வேலு
3. கார்த்தி
4. மாவட்ட ஆட்சியாளர், சேலம்
5. வட்டார வளர்ச்சி அலுவலர், கொங்கணாபுரம்.
6. ஊராட்சி மன்றத் தலைவர் கோரணம்பட்டி

.... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

**நீதிமன்ற அறிவிப்பு**

மேற்படி மனுதாரர்கள் / வாதிகள் மாண்பமை நீதிமன்றத்தில் எதிர் மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக மனு தாக்கல் செய்து எதிர் மனுதாரர்கள் / பிரதிவாதிகள் ஆஜராவதற்கு **29-04-2024** ஆம் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது. அம் மனு மீது மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு ஆட்சேபனை இருப்பின், **29-04-2024** காலை 10 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி ஆட்சேபனை தெரிவிக்க வேண்டியது. தவறும் பட்சத்தில் ஒரு தலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதனை அறியவும்.

// நீதிமன்ற உத்தரவுப்படி //

**R. BALU,** B.A., B.L.,
**P. MUTHAIYAN,** M.A., LLB.,
Advocates, Salem.

# ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் கம்பி வலைகள் மூலம் வன விலங்குகளின் உருவங்கள் அமைப்பு

**ஊட்டி, ஏப்.24-**

ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் கம்பி வலைகள் மூலம் வன விலங்குகளின் உருவங்கள் தத்ரூபமாக அமைக்கப்பட்டு வருகிறது.



மலைப்பிரதேசமான நீலகிரி மாவட்டம் சர்வதேச அளவில் புகழ் பெற்ற சுற்றுலா தலமாக விளங்குகிறது. இங்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் ஆண்டுதோறும் ஏப்ரல், மே மாதங்களில் கோடை சீசனும், அக்டோபர், நவம்பர் மாதங்களில் 2-வது சீசனும் நடைபெறுகிறது. அப்போது கண்காட்சிகள், சிறப்பு மலர் அலங்காரங்கள் இடம்பெறுவது வழக்கம். இதனால் வெளிமாநிலங்கள், பிற மாவட்டங்களில் இருந்து சுற்றுலா பயணிகள் ஊட்டிக்கு படையெடுத்து வருகின்றனர்.

இவ்வாறு வருபவர்கள் பெரும்பாலும் நூற்றாண்டு பழமை வாய்ந்த ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவுக்கு வந்து செல்கிறார்கள். அங்கு பழமையான மரங்கள், கண்ணாடி மாளிகை, பெரணி இல்லம், ஜப்பான் பூங்கா, இத்தாலியன் பூங்கா, இலை பூங்கா, பெரிய புல்வெளி மைதானம், மலர் மாடம், அலங்கார வேலிகள் போன்ற இடங்களில் பல வண்ண மலர்களை கண்டு ரசித்து புகைப்படம் எடுத்து மகிழ்கின்றனர்.

சுற்றுலா பயணிகள் ஓய்வெடுக்கும் வகையில் நிழற்குடைகள் உள்ளன. காட்சி மாடத்தில் நின்றபடி பூங்காவின் இயற்கை அழகை கண்டு ரசிக்கலாம். இந்தநிலையில் இந்த ஆண்டு கோடை சீசனுக்கு முன்பாக சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும் வகையில் பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டது. அதன் ஒரு பகுதியாக சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் கம்பி வலை மூலம் வனவிலங்குகளின் உருவங்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இதுகுறித்து அரசு தாவரவியல் பூங்கா உதவி இயக்குனர் பாலசங்கர் கூறியதாவது:-

நீலகிரி வனப்பகுதியில் உள்ள வனவிலங்குகளின் முக்கியத்துவத்தை சுற்றுலா பயணிகளுக்கு விளக்கும் வகையில், ரூ. 5 லட்சம் மதிப்பில் புலி, வரையாடு, மான், கரடி, காட்டு எருமை உள்ளிட்ட உருவங்கள் கம்பி வலை மூலம் செய்யப்பட்டு கூலாங்கற்கள் மூலம் நிரப்பப்பட்டு வர்ணம் தீட்டப்படும். இதன் பின்னர் வன விலங்குகளை சுற்றிலும் மலர் செடிகள் தொட்டிகளில் வைத்து அலங்கரிக்கப்படும். இந்தப் பணிகள் அடுத்த ஒரு சில நாட்களில் முடியும். இவ்வாறு அவர் கூறினார்.



ஊட்டி அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் நீலகிரி பாராளுமன்ற தொகுதியில் வாக்குப்பதிவான மின்னணு இயந்திரங்கள் பாதுகாப்பாக பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளதையும், இங்கு மத்திய காவல் படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளதையும் மாவட்ட தேர்தல் அலுவலர் மு.அருணா நேரில் பார்வையிட்டார்.

# வெளுக்கும் வெயில் - கோடைகால சிறப்பு வகுப்புகளை நடத்தக் கூடாது : பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்க த.மா.கா. கோரிக்கை

**ஈரோடு ஏப்.24-**

தமிழ் மாநில காங்கிரஸ் மாநில இளைஞரணி தலைவர் எம். யுவராஜா நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:



வரலாறு காணாத அளவில் நடப்பாண்டு ஈரோடு மாவட்டத்தில் வெப்பநிலை உச்சத்தைத் தொட்டு உள்ளது. ஏப்ரல் மாதத்தின் தொடக்கத்தில் இருந்தே வெயில் கடுமையாக உள்ளது. ஈரோடு சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த 20 நாட்களாக வெயில் 100 டிகிரிக்கு மேல் உள்ளது. வெயில் நாளுக்கு நாள் அதிகரித்து மே மாதத்தில் 113 டிகிரி வரை உயரலாம் என்ற தகவல் மக்களை அச்சுறுத்தி வருகிறது. பொதுவாக வேலூர், சேலம் மாவட்டங்கள் வெயில் உச்சத்தை தொடும். ஆனால் நடப்பாண்டு ஈரோட்டில் நேற்று 109.4 டிகிரி பேரன்ஹீட்டாக வெப்பம் இருந்தது. கடந்த 15 தினங்களாகவே வெப்பம் படிப்படியாக உயர்ந்து தமிழகத்தின் உச்சகட்ட வெப்பம் ஈரோடு மாவட்டத்தில் பதிவாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக கத்திரி வெயில் அக்னி நட்சத்திரம் வரும் மே 4 முதல் 29 வரை ஏற்படும். அக்கால கட்டத்தில் தான் வெயில் உச்சத்தை தொடும். ஆனால் அதற்கு மாறாக தற்போது ஒரு மாதம் முன்பாகவே வெயில் மக்களை வாட்டி வதைக்கிறது. பருவ காலங்கள் தவிர்த்து மழை பெய்கிறது. அப்படி பெய்தாலும் எப்போதும் இல்லாத அளவிற்கு கடுமையான மழைப்பொழிவு ஒரே நாளில் நிகழ்கிறது. இதற்கு உதாரணம் சமீபத்தில் தூத்துக்குடி மற்றும் சென்னையில் பெய்த பெரும் மழையாகும். மழைக்காலங்கள் இல்லாத சமயத்தில் கூட புயல் தமிழகத்தை தாக்குகிறது. தற்பொழுது வானிலை நிபுணர்கள் மற்றும் மருத்துவர்கள் தொடர்ந்து 60 வயது மேற்பட்டவர்கள் காலை 11 மணி முதல் மூன்று மணி வரை நடமாடக்கூடாது என அறிவித்துள்ளனர். பொதுவாகவே பெண்கள், குழந்தைகள் இந்த கடும் வெப்பத்தால் பாதிக்கப்படுவார்கள். இந்நேரத்தில் அதிக தண்ணீர் அருந்துவது, குளிர்பானங்கள் அருந்துவது அவசியம் என மருத்துவர் அறிவுறுத்தி உள்ளனர். தேர்தலில் கடந்த 2014 உடன் ஒப்பிடும்போது நடப்பாண்டு வாக்குப்பதிவு குறைந்துள்ளதற்கும் இந்த வெப்பம் ஒரு காரணம் என நிபுணர்கள் கூறியுள்ளனர். ஆனால் துரதிஷ்டவசமாக பள்ளி மாணவ மாணவிகளுக்கு இன்னும் தேர்வு முடியவில்லை. அவர்கள் பள்ளிக்கு இந்த வெயிலில் நடந்து செல்வது கவலை அளிக்கக் கூடியது. அதே போன்று கல்லூரிகளிலும் செமஸ்டர் தேர்வுகள் முழுமை பெறவில்லை. 10, 11, 12 வகுப்பு தேர்வு மட்டுமே முடிவடைந்துள்ளன. முன்னர் எல்லாம் ஒரு சில பள்ளிகளில் மட்டுமே நடைபெற்று வந்த, இந்த சிறப்பு வகுப்புகள் தற்பொழுது அதிகளவில் நடைபெற்று வருகிறது. இதனால் மாணவர்களிடையே உளவியல் பிரச்சனை ஏற்படுகிறது. கடும் வெப்பத்தை அரசு கருத்தில் கொண்டு உடனடியாக பள்ளி கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்க வேண்டும். வகுப்புகள் நடத்துவதை நிறுத்த வேண்டும் வெயிலின் தாக்கம் குறைந்த பிறகு தேர்வுகளை நடத்தலாம். வெப்ப அலை மேலும் உயரம் என்று வானிலை அறிஞர்கள் கூறுகிறார்கள். இந்நிலையில் சன் ஸ்ட்ரோக் எனப்படும் அதி வெப்பத்தின் காரணமாக உயிரிழப்பு கூட வட மாநிலங்களில் பல நடந்துள்ளன. வெப்பத்தாக்குதல் அதிகரித்தால் தோல் புற்று நோய்கள் உட்பட பல நோய்கள் மக்களைத் தாக்கும் அத்தகைய சம்பவம் தமிழகத்தில் நடைபெறாமல் இருக்க அரசு கல்லூரி மற்றும் பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்க வேண்டும். தேர்வுகளை தள்ளி வைப்பதால் எந்த பாதிப்பும் ஏற்படாது. காலாண்டு, அரையாண்டு மற்றும் பள்ளி இறுதி டெஸ்ட்களில் எடுத்த மதிப்பெண்ணை கொண்டு மாணவர்களுக்கு தேர்ச்சி அளிக்கலாம். பொதுவாக எட்டாவது வரை பயிலும் மாணவர்களுக்கு அனைவரும் பாஸ் என்ற விதிமுறை உள்ளது.

மத்திய மற்றும் மாநில அரசுகளில் பருவநிலை மாற்றம் குறித்த அமைச்சகங்கள் உருவாகியுள்ளன. அந்த அமைச்சகங்கள் எவ்வாறு இந்த அளவுக்கு வெப்பநிலை கடுமையாக உயர்ந்துள்ளது என்பதை குறித்து ஆய்வு மேற்கொள்ள வேண்டும். பொதுவாக வட மாநிலங்களில் தான் இத்தகைய சூழ்நிலை நிலவும் தமிழகத்திலும் இப்போது அதிக வெப்பம் காணப்படுகிறது. அரசு ஒவ்வொரு வருடமும் 2 கோடி மரங்களை நடுவதாக கூறுகிறது. ஆனால் மற்றொரு பக்கம் வெப்பநிலை படிப்படியாக உயர்ந்து வருகிறது. புவி இயற்கை மாறுபாடு காரணமாக வெப்பநிலை உயர்வதால் அண்டார்டிகா மற்றும் ஆர்டிக் பகுதிகளில் உள்ள பனிக்கட்டிகள் உருகும் சூழ்நிலை விரைவில் உருவாகும் என்று அறிஞர்கள் கூறியுள்ளனர். இதனால் கடல் மட்டம் உயரும். வங்கதேசம் மேற்கு வங்கம் சென்னை மற்றும் பல கடலோர மாவட்டங்கள் மற்றும் நாடுகள் பாதிக்கும் என ஏற்கனவே நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். புவி வெப்ப உயர கார்பன் டை ஆக்சைடு வெளியிடும் அதிக அளவிலான அலைகள் பெட்ரோல், டீசல் பயன்பாடுகள் அதிகரிப்பு, வாகனங்கள் பெருக்கம், மரங்கள் தொடர்ந்து வெட்டப்படுவது, பூமியில் உள்ள நிலத்தடி நீரை அதிகமாக உறிஞ்சுவது, மக்கள் தொகை பெருக்கம், நீராதாரங்களை சீரழிப்பது, ஆற்றில் மணலை அதிகம் அள்ளுவது போன்றவை முக்கிய காரணங்களாகும்.

எனவே போர்க்கால அடிப்படையில் மத்திய மாநில அரசுகள் சுற்றுச்சூழல் மாசு மற்றும் இயற்கை மாறுபாடு குறித்து உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் உலக அளவில் இது தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை என்றாலும் நமது நாட்டில் இந்த பிரச்சனை எப்படி எதிர்கொள்வது என்பதை அறிவியல் அறிஞர்கள் துணையோடு அரசு நீண்டகால திட்டங்கள் பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும் இயற்கையை பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வை அரசும் மக்களும் கடைபிடிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென த.மா.கா இளைஞர் அணியின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன் இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# ஊட்டி மலர் கண்காட்சியை முன்னிட்டு சிறந்த பூங்காக்களுக்கு பரிசு விண்ணப்பங்களை சமர்பிக்க 27-ந் தேதி கடைசி நாள்

**ஊட்டி, ஏப்.24-**

ஊட்டி மலர் கண்காட்சியை முன்னிட்டு நடத்தப்படும் சிறந்த பூங்காக்களுக்கான போட்டியில் பங்கேற்க விண்ணப்பங்களை சமர்பிக்க வரும் 27-ந் தேதி கடைசி நாள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டம் ஊட்டியில் மலர்கண்காட்சி அரசு தாவரவியல் பூங்காவில் அடுத்த மாதம் நடக்க உள்ளது. மலர்க்கண்காட்சியை முன்னிட்டு நீலகிரி மாவட்டத்திலுள்ள சிறந்த பூங்காக்களுக்கு, பரிசுகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. பூங்கா போட்டிக்கான விண்ணப்ப படிவங்கள் அரசு தாவரவியல் பூங்கா அலுவலகத்தில் உள்ள ஊட்டி, தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தில் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, பூங்காக்களின் உரிமையாளர்கள் போட்டிக்கான விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளலாம். இந்த விண்ணப்பங்கள் 24-ந் தேதி(இன்று) வரை வழங்கப்படும். பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் 27-ந் தேதிக்குள் அரசு தாவரவியல் பூங்காவில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தில் பதிவு ஒன்றுக்கு ரூ.100 வீதம் கட்டணத்துடன் செலுத்த வேண்டும். சிறந்த பூங்காக்களுக்கான தேர்வு செய்யும் குழு 29-ந்தேதி முதல் மே மாதம் 5-ந் வரை ஊட்டி, குன்னூர், கோத்தகிரி, கூடலூர் பகுதிகளில் பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், மலர்க்காட்சி அன்று நடத்தப்படும் பல்வேறுபோட்டிகளுக்கு மே 6-ந் தேதி முதல் 8-ந் தேதி வரை போட்டியாளர்கள் ஒரு பதிவிற்கு ரூ.50 வீதம் செலுத்தி பதிவுகளை மேற்கொள்ளலாம். மேலும் விபரங்களுக்கு தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை 0423-2442545 என்ற எண்ணில் தொடர்புக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# ஈரோட்டில் மஹாவீர் ஜெயந்தி விழா



**ஈரோடு ,ஏப் .24-**

மகாவீர் ஜெயந்தி விழாவையொட்டி குல்கித் ஜெயின் சங்கம் சார்பில் மௌன ஊர்வலம் நடந்தது .அகிம்சை, எந்த உயிர்களையும் கொல்லக்கூடாது, யாரையும் அடிமைபடுத்த கூடாது என்பது போன்ற மகாவீரரின் சமத்துவ கொள்கைகளை வலியுறுத்தும் வகையில் நடந்த இந்த ஊர்வலத்தில் ஏராளமான வடமாநிலத்தவர்கள் கலந்து கொண்டனர் இந்திரா நகரில் உள்ள ஜெயின் கோவிலில் இருந்து புறப்பட்ட இந்த ஊர்வலம் முக்கிய வீதிகள் சென்று மீண்டும் ஜெயின் கோவிலை அடைந்தது. இதன் பிறகு நடந்த நிகழ்ச்சியில் தலைவர் ஸ்ரீ பால் பாப்னா ,செயலாளர் திலிப் ஜி நிஜ்யா, பொருளாளர் விரஜ் வாலா கர்பாலா, லலிதா ஸ்ரீ பல்ஜி பாப்னா உள்பட ஏராளமான பேர் கலந்து கொண்டனர்.

# நீலகிரி உயிர் சூழல் மண்டலத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் கட்டமைப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும்

## உலக புவி தின விழாவில் வலியுறுத்தல்

**ஊட்டி, ஏப்.24-**

நீலகிரி உயிர்ச்சூழல் மண்டலத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டும் என்று உலக புவி தின விழிப்புணர்வு நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.




பூமியின் சுற்றுச்சூழல் முக்கியத்துவத்தை வலியுறுத்தியும், புவி மாசடைவதைத் தடுக்கும் எண்ணத்துடனும், 1970-ம் ஆண்டு முதல், உலக நாடுகள் அனைத்திலும், ஏப்ரல் 22-ந் தேதியை 'உலக புவி தினம்' என்று கடைப்பிடித்து வருகிறோம். இதையொட்டி நீலகிரியில் உள்ள இந்த கார்டன் ஆப் ஹோப் டிரஸ்ட் மூலம் ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் புவி பாதுகாப்பு குறித்து 'நீலகிரியை நேசிப்போம் என்ற தலைப்பில்' விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது புவி பாதுகாப்பு குறித்து பதாகைகளை ஏந்தி சுற்றுலா பயணிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இதுகுறித்து சுற்றுச்சூழல் ஆர்வலரும் நீலகிரி பழங்குடி இனக்குழு உறுப்பினருமான வாசமல்லி கூறியதாவது:-

உலகம் முழுவதும் 175 நாடுகள் இந்த தினத்தை கடைப்பிடிக்கின்றன. சூரிய குடும்பத்தில் பூமி மட்டுமே உயிரினங்கள் வாழ தகுதி படைத்ததாக உள்ளது. நம்மை தாங்கும் பூமியை நாம் பாதுகாக்க வேண்டும். உலக பூமி தினத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு கருப்பொருள் கடைபிடிக்கப்படுகிறது. இந்த ஆண்டு பிளாஸ்டிக்கில் இருந்து பூமியை பாதுகாப்பது கருப்பொருளாக கடைபிடிக்கப்படுகிறது. எனவே இயற்கை வளம், சுற்றுசூழலை பாதிக்கும் பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்க்க வேண்டும்.

நீலகிரி மாவட்டத்தில் எந்தவித கட்டுப்பாடுகளும் இல்லாமல் அதிக அளவில் சுற்றுலா வாகனங்கள் வருவதால், சுற்றுச்சூழலுக்கும், உள்ளூர் மக்களுக்கும் பெரிய பாதிப்பு ஏற்படுகிறது. எனவே வாகனங்கள் வருகைக்கு கட்டுப்பாடுகள் ஏற்படுத்த வேண்டும்.

நீலகிரியில் நிலத்தின் தன்மையை அறியாமல் சாலைகள் விரிவாக்கம் செய்யப்பட்டதால், கடந்த பருவ மழையின்போது மண் சரிவு பாதிப்பு அதிக அளவு ஏற்பட்டது. எனவே நீலகிரியின் உயிர்ச்சூழல் மண்டலத்தில் பாதிப்பு ஏற்படுத்தாதவாறு கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டும்.

இதேபோல் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பயன்பாடு நீலகிரியில் முற்றிலும் முடியவில்லை. பிளாஸ்டிக் பயன்பாட்டை தடுக்க நிரந்தர தீர்வு காண வேண்டும். பிளாஸ்டிக்கினால் பூமி மட்டுமல்ல வன விலங்குகளும் பாதிக்கப்பட்டு இயற்கை சமநிலை பாதிக்கப்படுகிறது. எனவே புவி மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம் இவ்வாறு அவர் கூறினார். நிகழ்ச்சியில் திரளான சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

# இந்தியன் வங்கி சார்பில் மகளிர் குழுக்களுக்கு தனி வங்கி விரைவில் திறக்கப்படும்

## கோவை கள பொது மேலாளர் சுதா ராணி தகவல்



**ஈரோடு ஏப் 24**

ஈரோடு இந்தியன் வங்கி ஈரோடு காந்திஜி ரோட்டில் இது வரை செயல்பட்டு வந்தது .இப்போது இந்த வங்கி ஈரோடு பெரியார் நகர் 80 அடி சாலை பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா நடந்தது. நிகழ்ச்சிக்கு மண்டல மேலாளர் ரத்தின வேல் வரவேற்று பேசினார் . கோவை இந்தியன் வங்கி கள பொது மேலாளர் சுதாராணி தலைமை தாங்கி புதிய கட்டிடத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். சேலம் மண்டல மேலாளர் ராஜ்குமார் முன்னிலை வகித்தார்.

ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் திமுக மாநகர செயலாளர் சுப்பிரமணியம் மற்றும் வாடிக்கையாளர்கள் உள்பட பலர் இதில் கலந்து கொண்டனர். ஈரோடு இந்தியன் வங்கியின் மெயின் கிளை மேலாளரும் உதவி பொது மேலாளருமான பசுபதி முடிவில் நன்றி கூறினார். கோவை இந்தியன் வங்கி கள பொது மேலாளர் சுதாராணி கூறியதாவது ஈரோடு இந்தியன் வங்கியில் ஆண்டுக்கு ரூ .700 கோடி வர்த்தகம் நடக்கிறது . இதை ரூ 1000 கோடியாக உயர்த்த இலக்கு நிர்ணயித்து பணியாற்று வருகிறோம். ஈரோடு மாவட்டத்தில் இந்தியன் வங்கி கிளை 16 உள்ளன. இன்னும் கூடுதலாக பத்து கிளைகள் மாவட்டம் முழுவதும் திறக்கப்பட உள்ளன. மகளிர் குழுக்களுக்கான தனி வங்கியும் ஈரோட்டில் விரைவில் திறக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# அம்பலமூலா அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கர்ப்பிணி பெண்களுக்கு மன நலன் உடல் நலன் ஆலோசனை முகாம்




ஊட்டி, ஏப்.24-

பந்தலூர் அருகே அம்பலமூலா அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கர்ப்பிணி பெண்களுக்கு மன நலன் உடல் நலன் ஆலோசனை முகாம் நடைபெற்றது.

கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம், ஆல் த சில்ரன் அமைப்பு, ஏகம் பவுண்டேசன் ஆகியன சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு சுகாதார நிலைய மருத்துவர் ஜெயபிரகாஷ் தலைமை தாங்கினார்.முதுநிலை செவிலியர் சந்திரா, நுகர்வோர் பாதுகாப்பு மைய துணை தலைவர் ராஜா, ஏகம் பவுண்டேஷன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ரவீந்திரன், ஆல் த சில்ரன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அஜித், டிவிஎஸ் சீனிவாசன் அறக்கட்டளை கள பணியாளர் பினு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.பிரம்மகுமாரிகள் அமைப்பு ஒருங்கிணைப்பாளரும்.மன நல ஆலோசகருமான ரேணுகா கலந்து கொண்டு பேசும்போது மனதில் மகிழ்ச்சி நிறைந்து இருக்கும் போது அமைதி ஏற்படும்.

எனவே காலையில் எழுந்து தியானம் செய்வது, சிறிய உடற்பயிற்சிகள் செய்வது புத்தகங்கள் படிப்பது மெல்லிய இசை கேட்பது ஆகியன மனதை எளிதாக்கும். இதன்மூலம் குழந்தையும் தாயும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். குழந்தை மன வளர்ச்சி பெற தாயின் மன நிலை காரணமாக அமைகிறது எனவே கோபம், வெறுப்பு, சோகம் ஆகிய வற்றை தவிர்த்து, மகிழ்ச்சியான மனநிலையை வளர்த்து கொள்ள வேண்டும் என்றார். கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம் பேசும்போது கர்ப்பிணிகளுக்கு குழந்தை வளர அனைத்து வித ஊட்ட சத்துக்களும் தேவை குறிப்பாக குழந்தையின் உடல் வளர்ச்சிக்கு அயோடின் நுண்ணூட்ட சத்து 220.பிபிஎம் அளவும் கல்சியம் 1000. மிகி, இரும்பு சத்து 27 மிகி,வைட்டமின் ஏ 770 மிகி, வைட்டமின் டி 600 மிகி, வைட்டமின் பி 13, வைட்டமின் சி 85.மிகி, உள்ளிட்டவை குழந்தையின் வளர்ச்சிக்கு தேவை படுகிறது. இதனை காய்கறிகள் பழங்களில் இருந்து பெற முடியும். எனவே கர்ப்பிணிகள் உணவை ஆரோக்கியமாக எடுத்து கொள்ள வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் சுகாதார நிலைய செவிலியர்கள் மற்றும் பல்வேறு பகுதியை சேர்ந்த கர்ப்பிணிகள் பலர் கலந்து கொண்டனர்.

# மண்டல அளவிலான ஸ்கேட்டிங் போட்டியில் நந்தா சென்டரல் மெயின் பள்ளி மாணவர்கள் சாதனை



ஈரோடு ஏப்.24-

கொங்கு மண்டல அளவிலான ரோலர் ஸ்கேட்டிங் போட்டி திருப்பூரில் அண்மையில் நடைபெற்றது. இப்போட்டியில் கோவை, திருப்பூர், கரூர், நாமக்கல் மற்றும் ஈரோடு அகிய கொங்கு மண்டல மாவட்டத்தில் செயல்பட்டு வரும் பள்ளிகளைச் சார்ந்த சுமார் 1300 மாணவர்கள் கலந்துக் கொண்டார்கள்.

இவர்களுடன் கூரப்பாளையம் பிரிவில் இயங்கிவரும் நந்தா சென்டரல் மெயின் பள்ளியினைச் சார்ந்த மாணவர்கள் பல்வேறு சுற்றுகளைக் கடந்து இறுதி போட்டிக்கு தகுதிப் பெற்றார்கள்.

இறுதிப் போட்டியின் முடிவில் 7 தங்கப் பதக்கங்கள். 5 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 8 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தம் 20 பதக்கங்களைப் பெற்று பெருமை சேர்த்தார்கள். மேலும் ஒட்டு மொத்த சாம்பியன் பிரிவில் மூன்றாம் இடம் பிடித்து சாதனைப் புரிந்தது குறிப்பிடத்தக்கது.பதக்கங்களையும், மூன்றாமிட சாம்பியன் பதவியினையும் தக்க வைத்து பள்ளிக்கு பெருமை சேர்த்த மாணவர்களுக்கு பள்ளியின் முதல்வர்கள் திரு. பிரகாஷ் நாயர் மற்றும் ராஜேஷ் ஆகியோர் சிறப்பு பரிசுகளை வழங்கி பாராட்டினார்.மேலும் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் .வி.சண்முகன், செயலர் .எஸ்.நந்தகுமார் பிரதீப், நந்தா கல்வி கல்வி நிறுவனங்களின் செயலர் .எஸ்.திருமூர்த்தி, நந்தா கல்வி நிறுவனங்களின் முதன்மை கல்வி அதிகாரி முனைவர். எஸ்.ஆறுமுகம், நிர்வாக அதிகாரி திரு. மனோகரன் மற்றும் ஸ்கேட்டிங் பயிற்சியாளர் . ஸ்ரீதர் ஆகியோர் சாதனை புரிந்த மாணவர்களை பாராட்டினார்கள்.

# நீலகிரியில் மே தினத்தன்று டாஸ்மாக் கடைகளுக்கு விடுமுறை

**ஊட்டி, ஏப்.24-**

நீலகிரியில் மே தினத்தன்று டாஸ்மாக் கடைகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளதாக மாவட்ட கலெக்டர் மு. அருணா தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு-

நீலகிரி மாவட்டத்தில் செயல்படும் எப்.எல்.1 மதுபான சில்லறை விற்பனை கடைகள், எப்.எல்.2 கிளப் பார்கள், எப்.எல்.3 ஓட்டல் பார்கள் மற்றும் எப்.எல்.3ஏ ஆகியவற்றில் எதிர்வரும் மே தினம் (01.05.2024) அன்று எவ்வித மதுபானங்களும் விற்பனை செய்யப்பட மாட்டாது எனவும், மேற்படி நாளில் கட்டாயமாக டாஸ்மாக் சில்லரை விற்பனை கடைகள், கிளப்கள், ஓட்டல் பார்கள் தமிழ்நாடு ஓட்டல்களில் உள்ள பார்கள் அனைத்தும் மூடப்பட்டிருக்கும் எனவும் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.மேற்படி தினத்தில் கட்டாயமாக டாஸ்மாக் சில்லரை விற்பனை கடைகள், கிளப்கள், ஓட்டல் பார்கள் தமிழ்நாடு ஓட்டல்களில் உள்ள பார்கள் அனைத்தும் மூடப்பட வேண்டும் என உத்திரவிடப்பட்டுள்ளது. உத்தரவை மீறி எவரேனும் மதுபானங்களை விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் சம்மந்தப்பட்ட மது விற்பனை உரிமதாரர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் மீது தமிழ்நாடு மதுவிலக்குச்சட்டம் 1937 மற்றும் சம்மந்தப்பட்ட இதர விதிகளின்கீழ் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி தினங்களில் நீலகிரி மாவட்டத்தில் டாஸ்மாக் சில்லரை விற்பனை கடைகள், கிளப்கள் மற்றும் ஓட்டல் பார்கள் தமிழ்நாடு ஓட்டல்களில் உள்ள பார்கள் ஏதேனும் திறந்திருப்பதாக பொதுமக்களுக்கு தகவல் தெரியும்பட்சத்தில் அந்த விவரத்தை மாவட்ட மேலாளர் (டாஸ்மாக்), எடப்பள்ளி, குன்னூர் (0423-2234211), கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ஊட்டி (0423-2223802) ஆகிய தொலைபேசி எண்களில் தெரிவிக்கலாம் என மாவட்ட கலெக்டர் மு.அருணா தெரிவித்துள்ளார்.

